செ.வெ.எண்:386/2009(செமதொஅ) நாள். 10.11.2009

**பாத்வே தொண்டு நிறுவனத்தின் சார்பில் மேல்மருவத்தூர் அருகே உள்ள அகிலி ஊராட்சியில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான காப்பகத்திற்கான புதிய கட்டடத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திரு.கீதா ஜீவன் ஆகியோர் திறந்து வைத்தார்கள்**

சென்னையில் உள்ள பாத்வே தொண்டு நிறுவனத்தின் சார்பில் மேல்மருவத்தூர் அருகில் உள்ள அகிலி கிராமத்தில் மனவளர்ச்சி குன்றிய மற்றும் ஊனமுற்ற குழந்தைகள் சாதாரண குழந்தைகள் போல் செயல்படுவதற்கான பயிற்சி முகாம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக, அமெரிக்காவில் செயல்படும் சாபீன் குழந்தைகள் அறக்கட்டளை உதவியுடன் ரூ.3 கோடியில் கட்டடப்பட்டுள்ள கட்டடத்தினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.கீதா ஜீவன் ஆகியோர் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது,

பாத்வே தொண்டு நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு மத்திய-மாநில அரசுகளின் விருதுகளை பெற்ற நிறுவனம் ஆகும். இந்த நிறுவனத்தில் 500க்கும் மேற்பட்ட குழந்தைகளை பேணி காத்து வருகிறார்கள். இந்த புதிய கட்டடத்தில் பிசியோதெரபி, பேச்சு பயிற்சிக்கான பிரிவு, ஒலிக்கூடம், பல் உணர்வு தெரபி பிரிவு, மருத்துவப் பிரிவு, நோய் பகுப்பாய்வு கூடம், பரிசோதனைக் கூடம், சிறப்பான கல்வித்துறை ஆகியவை இயற்கை சூழ்நிலையில் அற்புதமாக அமைந்துள்ளது. 1975ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் இலாப நோக்கில்லாமல் 27 ஆண்டுகளாக மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு உதவி செய்து வருகிறது. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக சிறந்த சேவை செய்வதில் தன்னையே முழுமையாக அர்பணித்துள்ளது. இந்த பகுதியில் மின்சார பற்றாக்குறை உள்ளதாக கூறினார்கள். அதைப் போக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுபோன்ற காப்பகத்தை பராமரிப்பதில் பிரசாத் அவர்களால் மட்டுமே முடியும். மேலும் இதுபோன்ற காப்பகங்களை தொடங்குவதற்கு அரசு தேவையான உதவிகளை செய்யுமென கூறினார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.கீதா ஜீவன் அவர்கள் பேசும்போது, ஊனமுற்றோர் நலனுக்காக 2008-2009ஆம் ஆண்டு ரூ.34 கோடி ஒதுக்கப்பட்டது. 2009-2010ஆம் ஆண்டுக்கு 104 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை 20,000 ஊனமுற்றோருக்கு மாதம் தோறும் தலா ரூ.500/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. அடையாள அட்டை பெற்ற ஊனமுற்றோருக்கு அரசு பேருந்துகளில் 75% சதவீதம் கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. பாத்வே தொண்டு நிறுவனத்திற்கு தமிழக அரசு உறுதுணையாக இருக்கும் என கூறினார்.

முன்னதாக பாத்வே நிறுவன இயக்குநர் திரு.ஏ.டி.எஸ்.என்.பிரசாத் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். சாபீன் குழந்தைகள் அறக்கட்டளை சார்பில் நீதிபதி வில்லியம் ஷிப்பீல்டு, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராசன், அச்சிறுப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சங்கரி நாராயணன் ஆகியோர் சிறப்புரையாற்றிப் பேசினார்கள். முடிவில் பாத்வே தலைவர் திருமதி.ரூபி பொன்னையா அவர்கள் நன்றி கூறினார். விழாவில் இ.டி.எஸ் தலைவர் திரு.வில்லியம் பெனக், திரு.கேரி சாபீன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்